கல்ட்.பிட் உடற்பயிற்சி நிறுவனம் கூடுதல் கிளை துவக்க உடற்பயிற்சி சாதனங்களை தயாரிக்க பங்கு வெளியீடு திட்டம்

மும்பை, ஜூலை 8– இந்தியாவின் மிகப்பெரிய உடற்பயிற்சி சேவைகள் வழங்குநரான கல்ட்.பிட் (CULT. FIT Ltd) (முன்னர் க்யூர் பிட் ஹெல்த்கேர்), தனது முதல் பொதுப் பங்களிப்பிற்காக விண்ணப்பத்தை செபியிடம் தாக்கல் செய்துள்ளது.

மார்ச் 31, 2026 நிலவரப்படி, இந்நிறுவனம் தனது வலையமைப்பில் உள்ள உடற்பயிற்சி மையங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தியாவின் மிகப்பெரிய உடற்பயிற்சி மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கைமுறை தளமாக விளங்குகிறது. இது கல்ட்.பிட் செயலி, கல்ட்.பிட் இணையதளம் மற்றும் பிற ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் சேனல்களை உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த தளம் மூலம் உடற்பயிற்சி சேவைகள் மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கைமுறை தயாரிப்புகளை வழங்குகிறது.

மார்ச் 31ந் தேதி நிலவரப்படி, உடற்பயிற்சி சேவைகள் மற்றும் உடற்பயிற்சி தயாரிப்புகள் ஆகிய இரண்டிலும் தடம் பதித்துள்ள இந்தியாவின் ஒரே உடற்பயிற்சி மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கைமுறை தளமாகவும் இந்நிறுவனம் விளங்குகிறது. ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கைமுறையை நாடும் தனிநபர்களுக்கு விருப்பமான இடமாகத் திகழ்வதே இந்நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த பங்கு வெளியீடு ரூ.950 கோடி வரையிலான புதிய ஈக்விட்டி பங்குகள் வெளியீடு மற்றும் விற்பனை செய்யும் பங்குதாரர்களால் 17,86,09,200 ஈக்விட்டி பங்குகளை விற்பனை செய்வதற்கான சலுகை ஆகியவற்றை உள்ளடக்கியது.

இந்த பங்கு வெளியீடு நிறுவனத்தால் பெறப்பட்ட சில கடன்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ திருப்பிச் செலுத்துதல்/முன்கூட்டியே செலுத்துதல் புதிய கல்ட் எலைட் மற்றும் கல்ட் நியோ மையங்களை (ஒட்டு மொத்தமாக, "கல்ட் மையங்கள்") அமைப்பதற்கான மூலதனச் செலவினம், புதிய பிரத்யேக பிராண்ட் விற்பனை நிலையங்களை ("EBOs") அமைப்பதற்கான மூலதனச் செலவினத்திற்காக அதன் துணை நிறுவனமான கல்ட் ஸ்போர்ட்டில் முதலீடு, நிறுவனத்தால் இயக்கப்படும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மையங்களுக்கான குத்தகை/வாடகை/உரிம ஒப்பந்தம் தொடர்பான செலவினம், பிராண்ட் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக பிராண்ட் சந்தைப் படுத்தல், விளம்பரம் மற்றும் வணிக மேம்பாடுக்கு பயன்படுத்தப்படும்.

தனது ஆடைப் பிரிவில், இந்நிறுவனம் பிரீமியம் பிரிவில் செயல்பட்டு, ஓட்டம், பயிற்சி, யோகா, சண்டை சார்ந்த உடற்பயிற்சி ஆடைகள் மற்றும் பிரத்யேகத் தொகுப்புகளுடன் செயல்திறன் மற்றும் தடகள பிரிமியம் ஆடைகளை வழங்குகிறது. தனது காலணிப் பிரிவில், இது இதேபோல் மதிப்பு மற்றும் வெகுஜனபிரீமியம் பிரிவில் செயல்பட்டு, ஓட்டம், பயிற்சி மற்றும் பல பயன்பாடுகளுக்காக செயல்திறன் சார்ந்த வசதிக்கு முக்கியத்துவம் தரும் காலணிகளை வழங்குகிறது. தனது உபகரணப் பிரிவில், இந்நிறுவனம் வீட்டிலும் வணிக உடற்பயிற்சி மையங்களிலும் பயன்படுத்தக் கூடிய உடற்பயிற்சி உபகரணங்களையும், அத்துடன் உடற்பயிற்சி துணைக் கருவிகள் உடற்பயிற்சி மிதிவண்டிகளையும் வழங்குகிறது.

இந்த வணிகம் ஒரு பன்முகப்படுத்தப்பட்ட வருவாய் மூலத்தால் பயனடைகிறது. இதில் உடற்பயிற்சி சேவைகள் வருவாயில் ஏறக்குறைய 70% பங்களிக்கின்றன. மீதமுள்ள 30% உடற்பயிற்சி பொருட்கள் வணிகத்திலிருந்து வருகிறது.

இதன் ஈக்விட்டி பங்குகள், பிஎஸ்இ மற்றும் என்எஸ்இ ஆகிய பங்குச்சந்தைகளில் பட்டியலிடப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளன.

ஆக்சிஸ் கேப்பிட்டல், கோல்ட்மேன் சாக்ஸ் (இந்தியா) செக்யூரிட்டீஸ், ஜெஃபெரீஸ் இந்தியா, ஜேஎம் பைனான்சியல் மற்றும் மார்கன் ஸ்டான்லி இந்தியா ஆகியவை இந்த வெளியீட்டிற்கான பங்கு வெளியீடு மேனேஜர்கள் ஆவர்.

பொது அறிவிப்பு

மாநில சுற்றுச்சூழல்தாக்க மதிப்பீட்டு ஆணையம் (State Level Environment Impact Assessment Authority) தமிழ்நாடு கடித எண். 13418, EC Identification No.EC26C0108TN5588456N, நாள்: 03.07.2026–ன்படி M/s. டாக்சைட் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (திரு. R. தசரதன்) என்பவருக்கு செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், அஞ்சூர் கிராமம், புல எண். 158(பகுதி) பரப்பு 3.00.00 ஹெக்டேரில் சாதாரண மண் குவாரி செயல்படுவதற்கு சுற்றுச்சூழல் தடையின்மை சான்று வழங்கியுள்ளது. மேற்காணும் சான்று விவரத்தை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், 76, மௌண்ட் சாலை, கிண்டி, சென்னை – 600 032 மற்றும் SEIAA இணையதளம் http://environmentalclearance.nic.in மூலம் தெரிந்து கொள்ளலாம்.

திரு. R. தசரதன்,
M/s. டாக்சைட் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்,
எண். 56, வி.ஜி.பி. நகர் கிழக்கு, விழுப்புரம் மாவட்டம் – 605401.

பொது அறிவிப்பு

மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (State Level Environment Impact Assessment Authority) தமிழ்நாடு கடித எண். 13448, EC Identification No.EC26C0108TN5709082N, நாள்: 03.07.2026–ன்படி திரு. R. தசரதன் என்பவருக்கு காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், வடக்குப்பட்டு B கிராமம், புல எண். 1013/1A1(பகுதி) மற்றும் 1013/1B (பகுதி) பரப்பு 3.33.75 ஹெக்டேரில் சாதாரண மண் குவாரி செயல்படுவதற்கு சுற்றுச்சூழல் தடையின்மை சான்று வழங்கியுள்ளது. மேற்காணும் சான்று விவரத்தை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், 76, மௌண்ட் சாலை, கிண்டி, சென்னை – 600 032 மற்றும் SEIAA இணையதளம் http://environmentalclearance.nic.in மூலம் தெரிந்து கொள்ளலாம்.

திரு. R. தசரதன்,
எண். 83/1A2, திருவண்ணாமலை முதன்மைச் சாலை,
மணம்பூண்டி கிராமம், திருக்கோவிலூர் தாலுகா, விழுப்புரம் மாவட்டம்.

பெட்டாலா ஸ்டாக் புரோக்கிங் லிமிடெட்

CIN: U65993TN1995PLC031502

முகவரி: 20, ஏகாம்பரேஸ்வரர் அக்ரஹாரம், பார்க் டவுன், சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 600003 மின்னஞ்சல்: cs.harishjain@gmail.com

மண்டல இயக்குனர் முன்னிலையில், தென் மண்டல அமர்வு, தமிழ்நாடு 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 13 (4)–ன் கீழ் மற்றும் M/s. பெட்டாலா ஸ்டாக் புரோக்கிங் லிமிடெட் விஷயத்தில்.

பதிவு அலுவலகம்: 20, ஏகாம்பரேஸ்வரர் அக்ரஹாரம், பார்க் டவுன், சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 600003

பதிவு அலுவலகத்தை தமிழ்நாடு மாநிலத்திலிருந்து குஜராத் மாநிலத்திற்கு மாற்றுவது குறித்த அறிவிப்பு

ஜூன் 29, 2026, திங்கட்கிழமை அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தின் அடிப்படையில், "தமிழ்நாடு மாநிலத்திலிருந்து" "குஜராத் மாநிலத்திற்கு" பதிவு அலுவலகத்தை மாற்றுவதற்காக, நிறுவனத்தின் குறிப்பாணையில் செய்யப்பட்டுள்ள மாற்றத்தை உறுதிப்படுத்தக் கோரி, 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 13–ன் கீழ், தமிழ்நாடு தென் மண்டல அமர்வின் மண்டல இயக்குனரிடம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிக்க நிறுவனம் உத்தேசித்துள்ளது என்று பொதுமக்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த பதிவு அலுவலக மாற்றத்தினால் நலன் பாதிக்கப்படக்கூடிய எவரும், இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 14 நாட்களுக்குள், தமது நலனின் தன்மை மற்றும் எதிர்ப்புக்கான காரணங்களைக் குறிப்பிட்டு ஒரு பிரமாணப் பத்திரத்துடன் கூடிய தமது ஆட்சேபனைகளை, மண்டல இயக்குனர், 5 வது மாடி, சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, சென்னை – 600006, தமிழ்நாடு, இந்தியா என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். மேலும், அதன் ஒரு நகலை விண்ணப்பதாரர் நிறுவனத்தின் மேலே குறிப்பிட்டுள்ள பதிவு அலுவலக முகவரிக்கும் அனுப்ப வேண்டும்.

பெட்டாலா ஸ்டாக் புரோக்கிங் லிமிடெட் நிறுவனத்திற்காக
ஒப்பம்/–
தினேஷ் பாபுலால் ஜெயின்
இயக்குனர்
DIN – 00991158

தேதி: 1 ஜூலை 2026
இடம்: தமிழ்நாடு

Chola Financial Holdings — murugappa

சோழமண்டலம் பைனான்சியல் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

CIN:L65100TN1949PLC002905

பதிவு அலுவலகம்: 'டேர் ஹவுஸ்', எண். 234, N.S.C. போஸ் சாலை, சென்னை – 600 001.
Phone: 044-40907638 / 2530 6486
E-mail: investorservices@cfhl.murugappa.com Website: www.cholafhl.com

77வது வருடாந்திர பொது கூட்டத்தை கூட்டுவது தொடர்பாக உறுப்பினர்களின் கவனத்திற்கான அறிவிப்பு

உறுப்பினர்கள் கவனத்திற்கு: கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (MCA), 22 செப்டம்பர் 2025 அன்று வெளியிட்ட சுற்றறிக்கை எண் 3/2025 (இதற்கு முன் இவ்விஷயத்தில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் தொடர்ச்சியாக) மூலம், உறுப்பினர்களின் நேரடி பங்கேற்பு இல்லாமலேயே காணொலி மாநாடு (VC) அல்லது பிற ஒலி-ஒளி வழிமுறைகள் (OAVM) மூலம் ஆண்டு பொதுக்கூட்டத்தை (AGM) நடத்த அனுமதி வழங்கியுள்ளது. நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பொருந்தக்கூடிய விதிமுறைகள், செபி (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 மற்றும் MCA சுற்றறிக்கைகளின் விதிகளுக்கு இணங்க, நிறுவனத்தின் 77வது ஆண்டு பொதுக்கூட்டம் (AGM) **14 ஆகஸ்ட் 2026, வெள்ளிக்கிழமை, பிற்பகல் 2.30 மணிக்கு (இந்திய நேரம்)** காணொலி மாநாடு (VC) மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

2025-26 நிதி ஆண்டுக்கான பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையை (e-AGM ஆவணங்கள்) பெற, மின்னஞ்சல் முகவரிகளை நிறுவனம்/M/s.கேபின் டெக்னாலஜிஸ் லிமிடெட், பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் (RTA) / வைப்புத்தொகை பங்கேற்பாளரிடம் (DPs) பதிவு செய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும், மின்னணு முறையில் அனுப்பப்படும். நிதியாண்டு 2025-26-க்கான e-AGM ஆவணங்களை அணுகுவதற்கான வலை இணைப்பை வழங்கும் கடிதம், தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும். மேலும், e-AGM ஆவணங்களின் அச்சு நகல் கோரும் உறுப்பினர்கள், தங்கள் ஃபோலியோ/டிமேட் கணக்கு விவரங்களை முறையாக மேற்கோள் காட்டி நிறுவனத்திற்கு கோரிக்கை அனுப்புமாறுக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 2025-26 நிதி ஆண்டுக்கான மின்னணு வருடாந்திர பொதுக் கூட்ட ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம் www.cholafhl.com மற்றும் பங்கு சந்தை இணையதளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.com. ஆகியவற்றில் கிடைக்கும்.

பங்குகளை காகித வடிவில் வைத்திருக்கும் உறுப்பினர்கள், இந்த விவரங்களை வழங்கவில்லை என்றால், படிவம் ISR-1 (நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டு உள்ளது: https://ris.kfintech.com/clientservices/isc/isrforms.aspx உடன் ஒரு கோரிக்கை கடிதத்தை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதில் மின்னஞ்சல் முகவரி, மொபைல் எண், சுய சான்றளிக்கப்பட்ட பான் நகல், கிளையன்ட் மாஸ்டர் நகல், ரத்து செய்யப்பட்ட காசோலை மற்றும் பங்குச் சான்றிதழின் நகலை RTA: கேபின் டெக்னாலஜிஸ் லிமிடெட், யூனிட் : **சோழமண்டலம் பைனான்சியல் ஹோல்டிங்ஸ் லிமிடெட்** செலினியம் டவர் B, மனை எண். 31 & 32, நானக்ராம்குடா, சைபர்சிட்டி, ஹைதராபாத் - 500 032. தொடர்பு எண்: 040-6716 2222; வாட்ஸ் அப் எண்: (91) 910 009 4099; கட்டணமில்லா எண்: 1800-309-4001. அல்லது மின்னணு முறையில் மின் கையொப்பமிட்டு einward.ris@kfintech.com க்கு வழங்க வேண்டும் அல்லது https://www.cholafhl.com/investors/sebi-norms. என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

மின்னணு முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணைப் பதிவு செய்யாமல்/புதுப்பிக்காமல் இருந்தால், மின்னணு வருடாந்திர பொதுக் கூட்ட ஆவணங்களைப் பெறுவதற்காக தங்கள் DPகளிடம் அதைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தின் போது மின்னணு வாக்களிப்பு மூலம் மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதி வழங்கப்படும். VC மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்கான விரிவான வழிமுறைகள், காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் அல்லது நிறுவனத்தில் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிப்பதற்கான நடைமுறைகள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்படும்.

இயக்குநர்கள் குழு 2025-26ம் நிதி ஆண்டிற்கு இறுதி ஈவுத்தொகையை ₹ 1.30/– பைசா வீதம் ஒரு சம பங்கிற்கு Re.1/- பரிந்துரை செய்துள்ளது என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்கூறிய செபி முதன்மை சுற்றறிக்கையின்படி, ஈவுத்தொகை மின்னணு முறையில் மட்டுமே செலுத்தப்படும். எனவே, பங்குகளை காகித வடிவில் வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் ஈவுத்தொகையைப் பெறுவதற்காக RTA-வில் வங்கிக் கணக்கு விவரங்கள் உட்பட தங்கள் KYC விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மின்னணு வடிவத்தில் வைத்திருக்கும் பங்குகளுக்கு, உறுப்பினர்கள் தங்கள் வங்கிக் கணக்கு விவரங்களை நேரடியாக தங்கள் DPயிடம் புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், வருமான வரிச் சட்டம், 2025ன்படி, பங்குதாரர்களின் கைகளில் ஈவுத்தொகை வருமானம் வரிக்கு உட்பட்டது, எனவே நிறுவனம் இறுதி ஈவுத்தொகையை செலுத்தும் வரி (TDS) பிடித்தம் செய்ய வேண்டும். நிறுவனம் பொருத்தமான TDS விகிதங்களை தீர்மானிக்க, உறுப்பினர்கள் தேவையான ஆவணங்களை https://ris.kfintech.com/form15/ என்ற பங்குதாரர் இணையதளத்தில் 30 ஜூலை, 2026 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சோழமண்டலம் பைனான்சியல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் சார்பாக
E கிருத்திகா
நிறுவன செயலாளர்

சென்னை
ஜூலை 7, 2026

Redington — UNLOCK NEXT

ரெடிங்டன் லிமிடெட்

பதிவு அலுவலகம்: பிளாக் 3, பிளாத்தின், ரெடிங்டன் டவர், இன்னர் ரிங் ரோடு, சரஸ்வதி நகர் மேற்கு, 4வது தெரு, புழுதிவாக்கம், சென்னை –600091, தமிழ்நாடு, இந்தியா
CIN: L52599TN1961PLC028758. Phone No.: 044-4224 3111
E–mail: investors@redingtongroup.com. Website: www.redingtongroup.com.

33வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம், 2013ன் (''சட்டம்'') பொருந்தக்கூடிய விதிகள், கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (MCA) செப்டம்பர் 3, 2025 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 03/2025 மற்றும் செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (செபி) அக்டோபர் 3, 2024 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CFDPoD–2/P/CIR/2024/133 ("செபி சுற்றறிக்கை") மற்றும் காணொளி காட்சி (VC) / பிற ஒலி ஒளி சாதனங்கள் ('OAVM') மூலமாக வருடாந்திர பொதுக்கூட்டத்தை (AGM) நடத்த அனுமதிக்கும் பொருந்தக்கூடிய பிற சுற்றறிக்கைகளுக்கு இணங்க, ரெடிங்டன் லிமிடெட் (''கம்பெனி'') உறுப்பினர்களின் **33வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM),** அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு வணிகங்களை பரிவர்த்தனை செய்வதற்காக **புதன்கிழமை, ஜூலை 29, 2026 அன்று காலை 11.00 மணிக்கு** (இந்திய நேரப்படி) காணொளி காட்சி (VC) / பிற ஒலி ஒளி சாதனங்கள் ('OAVM') மூலமாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கான இடமாக கம்பெனியின் பதிவு அலுவலகம் கருதப்படும்.

மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, **2025–26–ம் நிதி ஆண்டுக்கான வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு உள்ளிட்ட ஆண்டறிக்கையின் மின்னணு நகல்,** டெபாசிட்டரி பங்கேற்பாளர்(கள்) / கம்பெனி பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு **ஜூலை 7, 2026** அன்று மின்னணு வடிவில் அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்கள் கீழ்க்கண்ட வலைதளங்களில் கிடைக்கும் மற்றும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்:

* **கம்பெனியின் வலைதளம்:** https://redingtongroup.com/investors/
* **பங்குச் சந்தைகள்:** www.nseindia.com, www.bseindia.com
* NSDL: www.evoting.nsdl.com

மின்னணு–வாக்குப்பதிவு (e–voting) மூலம் வாக்களிக்கும் முறை:

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீதும் உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு வசதி மூலமாகவோ அல்லது NSDL வழங்கும் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னணு–வாக்குப்பதிவு முறை மூலமாகவோ வாக்களிக்கும் வசதி வழங்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில்:

(a) மின்னணு முறை மூலமாகவோ அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போதோ வாக்களிப்பதற்கான தகுதியை நிர்ணயிப்பதற்கான கட் ஆப் தேதி (cut–off date) புதன்கிழமை, ஜூலை 22, 2026 ஆகும்.

(b) தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு சனிக்கிழமை, ஜூலை 25, 2025 காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி செவ்வாய்க்கிழமை, ஜூலை 28, 2026 மாலை 5:00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடையும். அதன் பிறகு NSDL–ஆல் மின்னணு–வாக்குப்பதிவு தளம் முடக்கப்படும்.

(c) VC/OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் மற்றும் தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு மூலம் தீர்மானங்கள் மீது வாக்களிக்காதவர்கள் (வாக்களிக்க தடை விதிக்கப்படாத பட்சத்தில்), வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னணு–வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.

(d) கூட்டத்திற்கு முன்பாக தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்களும் VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்/பங்கேற்கலாம், ஆனால் மீண்டும் வாக்களிக்க அவர்களுக்கு உரிமை கிடையாது.

(e) கம்பெனியால் மின்னணு முறையில் அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு கம்பெனியின் பங்குகளைப் பெற்று கம்பெனியின் உறுப்பினராகி, கட் ஆப் தேதியன்று பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும் evoting@nsdl.com என்ற முகவரிக்கு கோரிக்கை அனுப்புவதன் மூலம் உள்நுழைவு ஐடி (login ID) மற்றும் கடவுச்சொல்லைப் (password) பெறலாம். இருப்பினும், அவர் ஏற்கனவே தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவிற்காக NSDL–ல் பதிவு செய்திருந்தால், வாக்களிக்க தனது தற்போதைய பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தலாம்.

மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யும் / புதுப்பிக்கும் முறை:

நீங்கள் உங்கள் மின்னஞ்சல் முகவரியை கம்பெனி/டெபாசிட்டரியிடம் பதிவு செய்யவில்லை என்றால், மின்னணு–வாக்குப்பதிவிற்கான உள்நுழைவு விவரங்களைப் பெற பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றவும்:

(a) காகித வடிவில் (physical form) பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், முறையாக பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட படிவம் ISR–1 கோரிக்கை கடிதத்துடன், ஆதாருடன் இணைக்கப்பட்ட பான் கார்டின் சுய–சான்றளிக்கப்பட்ட நகல்; மற்றும் உறுப்பினரின் முகவரிக்கான ஆதாரமாக எந்தவொரு ஆவணத்தின் சுய–சான்றளிக்கப்பட்ட நகல் (ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், தேர்தல் அடையாள அட்டை, பாஸ்போர்ட் போன்றவை) மற்றும் படிவம் ISR–1–ல் பரிந்துரைக்கப்பட்டுள்ள பிற ஆவணங்களை investor@cameoindia.com அல்லது investors@redingtongroup.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். அதனைத் தொடர்ந்து அவற்றின் காகித நகலை கம்பெனியின் பதிவு அலுவலகம்/ RTA–க்கு தபால் மூலம் அனுப்புவது கட்டாயமாகும்.

(b) டிமேட் முறையில் (demat mode) பங்குகளை வைத்திருந்தால், தயவுசெய்து உங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளரை (DP) தொடர்புகொண்டு, உங்கள் DP அறிவுறுத்திய நடைமுறையின்படி உங்கள் மின்னஞ்சல் முகவரியை உங்கள் டிமேட் கணக்கில் பதிவு செய்யவும்.

(c) சரியான நேரத்தில் தகவல்களைப் பெறுவதற்கு, உங்கள் புதுப்பிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரியை கம்பெனி / டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் பதிவு செய்து வைத்திருக்கவும்.

VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைதல்:

NSDL மின்னணு–வாக்குப்பதிவு முறை வழியாக VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள உறுப்பினர்களுக்கு வசதி வழங்கப்படும். கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான விரிவான வழிமுறைகள் மற்றும் பின்பற்ற வேண்டியவை குறித்து வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் விளக்கப்பட்டுள்ளன.

தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னணு–வாக்குப்பதிவு ஆகிய இரண்டையும் நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்ய **திரு. வி. சுரேஷ் (பார்ட்னர், வி. சுரேஷ் அசோசியேட்ஸ், பயிற்சி செய்யும் கம்பெனி செயலாளர்கள்)** அவர்களை ஆய்வாளராக (Scrutinizer) கம்பெனி நியமித்துள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான ஏதேனும் சந்தேகங்கள் அல்லது குறைகள் இருந்தால், உறுப்பினர்கள் NSDL–ன் மின்னணு–வாக்குப்பதிவு வலைதளமான www.evoting.nsdl.com –ன் 'பதிவிறக்கங்கள்' (Downloads) பிரிவில் கிடைக்கும் உறுப்பினர்களுக்கான 'அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்' (FAQs) மற்றும் மின்னணு–வாக்குப்பதிவு பயனர் கையேட்டைப் பார்க்கவும் அல்லது 022–48867000 / 022–2499 7000 என்ற எண்களை அழைக்கவும் அல்லது evoting@nsdl.com –க்கு கோரிக்கை அனுப்பலாம்.

ரெடிங்டன் லிமிடெட்டிற்காக
கே விஜய்ஷ்யாம் ஆச்சார்யா
கம்பெனி செயலாளர்

தேதி: ஜூலை 7, 2026
இடம்: சென்னை

பெயர் மாற்றம்

சென்னை – 600005, திருவல்லிகேணி, டாக்டர் நடேசன் சாலை, லோட்டஸ் அப்பார்ட்மெண்ட்ஸ், முதல் தளம், கதவு எண் 129 என்ற முகவரியில் வசிக்கும், 59 வயதான திரு. மரியதாஸ் அவர்களின் மகனான தனிஸ்லாஸ் (STANISLAUS) ஆகிய நான், எனது தந்தையின் சரியான பெயர் 'மரியதாஸ்' (MARIADOSS) என்றும், 'மரியதாஸ்' (MARIADASS) அல்ல என்றும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனிஸ்லாஸ்

பெயர் மாற்றம்

சென்னை – 600005, திருவல்லிகேணி, டாக்டர் நடேசன் சாலை, லோட்டஸ் அப்பார்ட்மெண்ட்ஸ், முதல் தளம், கதவு எண் 129 என்ற முகவரியில் வசிக்கும், திரு. ஜான் கிராஸ் அவர்களின் மகளான, 55 வயதுடைய, லலிதா ஜோஸ்பின் ஆகிய நான், எனது சரியான பெயர் 'LALITHA JOSEPIN' என்றும், 'LALITHA JOSEPHINE' அல்ல என்றும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

லலிதாஜோஸ்பின்
(LALITHA JOSEPIN)

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம்
(சாதாரண அசல் உரிமையியல் அதிகார வரம்பு)
வழக்கு எண்.C.S. 293 of 2025
டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன் (இறந்துவிட்டார்) மற்றும் 6 பேர்கள் – வாதிகள்
எதிர்
M/s. மாதா ரெசிடென்சி ஹோட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் 9 பேர்கள் –பிரதிவாதிகள்

பெறுநர்:
திருமதி. புவனேஸ்வரி,
மாவட்டப் பதிவாளர் (தணிக்கை),
பதிவு அலுவலகம், அரக்கோணம்
(8–வது எதிர்வாதி)
சென்னை, கோயம்பேட்டில் உள்ள சொத்து தொடர்பாக உரிமைப் பிரகடனம் மற்றும் தடை உத்தரவு கோரி,டாக்டர் சௌந்தர பாண்டியன் மற்றும் பிறரால் மாதா ரெசிடென்சி ஹோட்டல் பிரைவேட் லிமிடெட் மற்றும் 9 பேருக்கு எதிராக மேற்கூறிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வழக்கில் நீங்கள் 8–வது எதிர்வாதியாகச் சேர்க்கப்பட்டுள்ளீர்கள். மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் 'மாஸ்டர்' (Master) அவர்களின் 02.07.2026 தேதியிட்ட உத்தரவின்படி, நீங்கள் 04.08.2026 அன்று காலை 10.30 மணிக்கு மேற்கூறிய நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள். தவறினால், உங்களுக்கு எதிராக இவ்வழக்கு முடிவு செய்யப்படும்

சி.சீதாபதி,
ஏ.உமாசங்கர்,
வாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள்

BEFORE THE HON'BLE XIX ASSISTANT CITY CIVIL COURT
I.A No.15 of 2026
in
O. S No 591 of 2024

1. **K.Mani**
   S/o.Kullappan
2. **M.Bhuvaneshwari**
   W/o.K.Mani
   Both residing at
   No 11, Kavin's Inn,
   Ragavendra Street,
   Nethaji Colony,
   **Velachery, Chennai 600-042.